**திருக்கோவில் பிரதேச சபை,**
**அம்பாரை மாவட்டம்.**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்**

2018 ம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2019 மரர்ச் 15 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை மற்றும் விரிவான முகாமைத்துவ அறிக்கை 2019 மே 31 ஆந் திகதி பிரதேச சபை தவிசாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து திருக்கோவில் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் நிதிநிலைமையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலையை தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (i) சபைக்குச் சொந்தமான காணிகளின் பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்குகளுக்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. | காணிகளின் பெறுமதி மதிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படல் வேண்டும். | எனவே இவற்றை மேற்கொள்ள எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ii) சபைக்குச் சொந்தமானதும் சபையினால் பயன்படுத்தப்பட்டு வருகின்றதுமான 12 வாகனங்களின் பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்குகளுக்கு வரப்பட்டிருக்கவில்லை. | மோட்டார் வாகனங்களின் பெறுமதியானது நிலையான சொத்துக்களில் கொண்டு வரப்படவேண்டும். | இவற்றின் பொதுவான ஆயுள்காலம், பொதுவான பெறுமானத்தேய்வு வீதம், இறுதி இரும்புப்பெறுமதி என்பவற்றின் அடிப்படையில் அவற்றை மதிப்பிட்டு 2019ஆம் ஆண்டு கணக்குகளில் சேர்க்க நடவடிக்கை எடுக்கப்படும். |
| (iii) மீளாய்வாண்டு மற்றும் 2017ஆம் ஆண்டுகளில் நன்கொடையாகப் பெறப்பட்ட முறையே 105 மற்றும் 104 புத்தகங்களின் பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்குகளுக்கு கொண்டுவரப்படாமையால் திரண்டநிதி மற்றும் நிலையான சொத்து என்பன குறைத்துக் காட்டப்பட்டுள்ளது. | உரிய காலத்தில் மதிப்பிடப்பட்டு கிரயப் பெறுமதியானது நிலையான சொத்துக்களில் கொண்டு வரப்படவேண்டும். | தற்போது அவற்றின் பெறுமதி ரூபா 35,805 ஆக மதிப்பிடப்பட்டுள்ளது. 2019ஆம் ஆண்டு கணக்குகளில் அவை வெளிப்படுத்தப்படும் என்பதனை தங்களின் மேலான கவனத்திற்கு அறியத்தருகின்றேன். |

| | | |
|---|---|---|
| (iv) 2017ஆம் ஆண்டில் தேசிய வலுவூட்டல் வேலைத்திட்டத்தின் கீழ் தம்பிலுவில் பொதுச்சந்தைக் கடை அறைகளானது ரூபா 16,867,702 செலவில் விரிவுபடுத்தப்பட்ட போதிலும், இதன்போது உடைக்கப்பட்ட பழைய பொதுச்சந்தைக் கடையறைக் கட்டிட பெறுமதிகளானது மதிப்பிடப்பட்டு கணக்குகளிலிருந்து கழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பழைய பொதுச்சந்தைக் கடை அறைக் கட்டிட பெறுமதிகளானது மதிப்பிடப்பட்டு கணக்குகளிலிருந்து கழிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல். | பழைய கட்டடத்தின் பெறுமதி ரூபா 1,600,000 ஆகும். இத்தொகை 2019ஆம் ஆண்டு கணக்குகளில் கழித்துக் காட்டப்படும். |

### 1.3.2 ஆவணச்சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஐந்தொகையில் காட்டப்பட்ட 05 விடயங்களின் கூட்டு மொத்த தொகை ரூபா 98,151,567 விற்கான ஆவணச்சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப் பட்டுள்ள கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | 2013ஆம் ஆண்டு நிதிக் கூற்றுக்களில் இருந்து இவை பிரித்தெடுக்கப்பட்டவையாகும். இவற்றிற்கான ஆவணச்சான்றுகளைப் பெறுவதற்கான முயற்சிகள் எடுத்தபோதிலும் அவற்றை இன்றுவரை பெறமுடியாதுள்ளது. எதிர்காலத்தில் இவற்றை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். |

## 1.4 இணங்காமைகள்

--------------------

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை.

--------------------------------------------------------------------------------------------------------------

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்கி ஒழுகாத சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | சட்டங்கள்,விதிகள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 12(1) மற்றும் (2) ஆம் பிரிவுகள் மற்றும் உள்ளூராட்சி வீடமைப்பு மற்றும் நிர்மாண வேலைகள் அமைச்சினது 1988 சனவரி 13 ஆம் திகதிய 488/16 ஆம் இலக்க வர்த்மான அறிவித்தலின் 31(1) ஆம் உப பிரிவு | பிரதேச சபைகளின் நடவடிக்கைகளை இலகுபடுத்தும் நோக்குடன் நிறைவான தீர்மானங்களை பெற்றுக் கொள்வதற்காகவும் சபையில் கொள்கைத் திட்டமிடல், வீடமைப்பு, சமூக அபிவிருத்தி, தொழிநுட்பச் சேவைகள், சுற்றாடல் மற்றும் பொது வசதிகள் போன்ற விடயங்களுக்காக தனித்தனி குழுக்கள் மீளாய்வாண்டில் நியமிக்கப்பட்டிருந்த போதிலும், அக்குழுக்களால் இன்று வரை 02 கூட்டங்கள் மாத்திரமே நடாத்தப்பட்டுள்ளது. | குறித்த சட்டத்தின் பிரகாரமும் வர்த்தமான அறிவித்தலின் படியும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | எதிர்வரும் காலங்களில் கூட்டங்களை கூட்டி சபை நடவடிக்கைகளை இலகு படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை தங்களின் மேலான கவனத்திற்கு தருகின்றேன். |
| (ஆ) | 1988 ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி, நிருவாக விதிகள் பிரிவு 193 | மீளாய்வாண்டிற்கான உள்ளபடியான வருமானம் மற்றும் செலவு தொடர்பான விபரங்கள் வரவு செலவுத் திட்டத்துடன் ஒப்பிடப்பட்டு முரண்பாட்டுக்கான விளக்கங்களை உள்ளடக்கிய கூற்று தயாரிக்கப்பட்டு கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை . | குறித்த விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | இதற்கு முன் இவ்வாறானதொரு ஆவணம் எம்மிடம் கோரப்பட்டு இருக்கவுமில்லை. இம்முறை அதுகோரப்பட்டுள்ள தால் அடுத்த கணக்கறிக்கைகள் தயாரிக்கப்படும் போது நிதிக்கூற்றுக்களுடன் இதையும் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும். |
| (இ) | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 571 | இரண்டு ஆண்டுகளிற்கு மேற்பட்ட 44 காலங்கடந்த வைப்புக்கள் தொடர்பில் சபை உரிய நபர்களிற்கு திருப்பிக் கொடுக்கவோ அல்லது வருமானக் | காலங்கடந்த வைப்புக்கள் நிதிப்பிரமானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட | இவை அனைத்தும் இனம் காணப்பட்டு அவற்றிற்கான உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட பின்னர் 2019ஆம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கணக்கிற்கு மாற்றுவதற்கோ நடவடிக்கை எடுக்கவில்லை. | வேண்டும். | ஆண்டு கணக்கறிக்கை சமர்ப்பிக்கப்படும். |
| (ஈ) | IAI/2002/02 ஆம் இலக்க 2002 நவம்பர் 28ஆந் திகதிய திறைசேரி சுற்றறிக்கை | 11 கணினிகள் மற்றும் கணினி உதிரிப்பாகங்கள், கணினி மென்பொருட்கள் என்பவற்றை பதிவதற்கான தனியான பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை. | அரச திறைசேரிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | ஏதிர்வரும் காலங்களில் அவற்றை பதிந்து தங்களுக்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும். |

**1.4.2 வரித் தேவைப்பாடுகளுடன் இணங்காமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2012 ஆண்டிற்கு முன்னர் அறவிடப்பட்ட நாட்டைக் கட்டியெழுப்புதல் வரி ரூபா 32,412 மற்றும் பெறுமதி சேர்க்கப்பட்ட வரி ரூபா 34,132 மற்றும் முத்திரை வரி ஆகியவற்றின் மொத்தம் ரூபா 66,544 தொகைகள் தொடர்பான எவ்வித ஆவணங்களும் இன்றி 08 வருட காலமாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டு வருகின்றது. | விபரங்கள் திரட்டப்பட்டு இவற்றை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | 2019ஆம் ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கின்ற போது அவற்றை உள்நாட்டு இறைவரித்திணைக்களத்திற்கு செலுத்தவோ அல்லது வருமானமாக மாற்றவோ நடவடிக்கை எடுக்கப்படும். |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா 6,932,720 ஆக இருந்ததுடன், இதனோமொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா 3,005,795 தொகையாக ஆக இருந்தது.

### 2.2 வருமான முகாமைத்துவம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளுக்குரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான மூலம் | 2018 மதிப்பிடப் பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவைகள் | 2017 மதிப்பிடப் பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவைகள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| -------------- | ------------- | -------------- | --------------- | -------------- | ------------- | -------------- | --------------- | -------------- |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 13,500 | 4,000 | 9,110 | 2,112 | 40,000 | 5,648 | 5,648 | 7,222 |
| வாடகைகள் | 3,425,000 | 3,850,642 | 3,928,518 | 2,474,142 | 3,295,000 | 3,378,113 | 3,213,038 | 2,552,018 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 667,500 | 697,410 | 708,135 | 7,230 | 687,500 | 586,000 | 586,000 | 17,955 |
| ஏனைய வருமானம் | 4,216,000 | 11,362,572 | 11,362,572 | - | 6,405,000 | 2,343,391 | 2,343,391 | - |
| | 8,322,000 | 15,914,624 | 16,008,335 | 2,483,484 | 10,427,500 | 6,313,152 | 6,148,077 | 2,577,195 |

**2.2.2 வாடகை**

------------

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| --------------------------------- | --------------- | -------------------------------------- |
| (அ) வாடகை வருமான நிலுவையானது ரூபா 934,190 தொகையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | நிலுவைக் வருமானத்தினை உரிய காலத்தில் அறவிட நடவடிக்கை எடுத்தல். | அனைத்திற்கும் எதிர்காலத்தில் சட்டநடவடிக்கை எடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பதனை தங்களின் மேலான கவனத்திற்கு தருகின்றேன். |
| (ஆ) சபையின் நிர்வாக எல்லைக்குள் அமைக்கப்பட்டுள்ள 07 தொலைத்தொடர்பு கோபுரங்களிற்கான வியாபார உரிமைக்கட்டணம் மீளாய்வாண்டில் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவைக் வருமானத்தினை உரிய காலத்தில் அறவிட நடவடிக்கை எடுத்தல். | 2019ல் 2018ஆம் ஆண்டுக்கான வியாபார உரிமத்தையும் சேர்த்து அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதனை தங்களின் மேலான கவனத்திற்கு தருகின்றேன். |
| (இ) 2018 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான 84 குத்தகையாளர்களிடமிருந்து நிலுவை ரூபா 1,539,952 தொகை மீளாய்வாண்டில் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவைக் வருமானத்தினை உரிய காலத்தில் அறவிட நடவடிக்கை எடுத்தல். | கட்டத் தவறியுள்ளவர்களிற்கு எதிர்காலத்தில் சட்டநடவடிக்கை எடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. |

**2.2.3 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்**

--------------------------------------------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| -------------------------------- | ------------ | ------------------------------------------------------ |
| மாகாண சபையின் பிரதம செயலாளர் மற்றும் அனைத்து அதிகாரிகளிடமிருந்து 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 406,666 தொகையான நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் ரூபா3,151,200 தொகையான முத்திரைக் கட்டணங்கள் | பெறவேண்டிய வருமானத்தினை உரிய காலத்தில் அறவிட நடவடிக்கை எடுத்தல். | இவற்றைப் பொறுத்தவரை வருடமுடிவிற்கு முன்னரே கணக்கிட்டுக்கொள்வதென்பது முடியாதகாரியமாக காணப்படுகின்றது. சம்பந்தப்பட்ட நிறுவனங்களிடம் இருந்து பெறப்படும் அறிவித்தல் அல்லது கோரிக்கைகளை வைத்தே நாம் அடுத்தகட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வோம் அந்த அடிப்படையில் கணக்கறிக்கைக்கு பின்னரே இவை அறிவிக்கப்பட்டிருந்தன. தற்போது அத்தொகைகளை பெறுவதற்கான |

| | |
|---|---|
| பெறப்பட வேண்டியிருந்தன. | அனைத்துவிடயங்களும் பூர்த்தியடைந்துவிட்டன. |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம், பொதுச் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வழிகள், மற்றும் மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

**(அ) உப விதிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 1987 ஆம் ஆண்டின் 15 இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 126 ஆம் பிரிவின் பிரகாரம், பிரதேச சபையின் வருமானம் மற்றும் ஒழுங்கமைப்புக்காக 20 முக்கிய விடயங்கள் தொடர்பில் உபவிதிகள் தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படத்தப்பட்டிருக்க வேண்டும். இருந்தும், 19 விடயங்கள் தொடர்பில் உபவிதிகளை உருவாக்குவதற்கான நடவடிக்கைகள் சபையினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | அங்கீகாரத்திற்காக அனுப்பப்பட்ட உபவிதிகள் அவற்றிக்கான அனுமதிகள் பெறப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அத்துடன் சபைக்கு பொருத்தமான ஏனைய விடயங்கள் தொடர்பிலும் துணைவிதிகள் உருவாக்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | உபவிதிகளை உருவாக்குவது தொடர்பாக 2019 மே மாத சபை அமர்வில் கலந்தாலோசிக்கப்பட்டுள்ளது. பொருத்தமான உபவிதிகளை உருவாக்குவதென்றும், ஆக்கப்பட்ட உபவிதிகளில் திருத்தங்களைச் செய்து வர்த்தமானியில் வெளியிடுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் இணங்கப்பட்டுள்ளது. |

**(ஆ) செயல் நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அனுமதி பெறப்பட்ட திண்மக்கழிவு உப விதியின் பிரகாரம் சபையினால் செயல்படுத்தப்பட்டிருக்க வேண்டிய முக்கிய விடயங்கள் தொடர்பில் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். | தற்போதிலிருந்து வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

**(இ) திண்மக் கழிவு முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்குச் சொந்தமான மண்டானையில் அமையப்பெற்றுள்ள திண்மக்கழிவு சேகரிப்பு நிலையத்தில் இயங்கிவரும் பசளை உற்பத்தி நிலையத்தின் பசளைக்கான கேள்வியின்மை மற்றும் முறையற்ற சந்தைப்படுத்தல் காரணமாக 05 மாத காலமாக விளைவற்று காணப்படுவதுடன், சபைக்கான வருமானங்களும் இழக்கப்பட்டு வருகின்றமை தொடர்பாக சபையினால் நடவடிக்கை இதுவரை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சேதனப் பசளை தொடர்பிலான விழிப்பூட்டலை மேற்கொண்டு முறையான சந்தைப்படுத்தலின் ஊடாக சபையின் வருமானத்தினை அதிகரித்தல். | விவசாயிகளுக்கு ரூபா 350 மானிய விலையில் 50கிலோ செயற்கைப்பசளை விவசாயத் திணைக்களத்தினூடாக வழங்கப்படுவதனால் மக்கள் அப்பசளையிலேயே நாட்டமுள்ளவர்களாக காணப்படுகின்றனர். இதனால் 50 கிலோவிற்கு ரூபா 150 மீதப்படுத்தப்படுவதுடன் விளைச்சலும் அதிகமாக காணப்படும் என விவசாயிகள் நம்புகின்றனர். |

**(ஈ) சுற்றுச்சூழல் பிரச்சினை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மண்டானை பிரதேசத்தில் அமைந்துள்ள திண்மக்கழிவு சேகரிப்பு நிலையத்தின் கடந்த 05 மாதகால பசளை தயாரிப்பின் செயலிழப்பினால் குப்பைகள் பிரித்தெடுக்கப்படாமல் குவிந்து காணப்படுகின்றன. | திண்மக் கழிவுகளை தரம் பிரித்து சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல். | தற்போது திண்மக்கழிவுகளை சேகரிக்கும் இடம் நிரம்பியதனால் அதை மூடவேண்டிய நிலை காணப்படுகின்றது. புதிதாக ஒரு இடத்தை வழங்குமாறு பிரதேச செயலாளரைக் கோரியிருந்தோம். அவர் வில்காமத்தில் ஒரு இடத்தை அரசகாணியாக எமக்கு கூறி ஒதுக்கித்தந்தார். அவ்விடத்தை நாங்கள் துப்பரவு செய்யச் சென்றபோது பொதுமக்கள் அது தங்களின் காணி என ஆர்பாட்டம் செய்கின்றனர். பிறிதொரு இடத்தை வழங்குமாறு பிரதேச செயலாளரைக் கோரியுள்ளோம் அது கிடைக்கப்பெற்றதும் திண்மக்கழிவு சேகரிப்பு நிலையம் இடமாற்றப்படும். |

**(உ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் நிலைபேறான அபிவிருத்தி தொடர்பாக அளவிடுவதற்கான குறிகாட்டிகளை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இலக்குகள் அடையாளங்கண்டு அதனை அளவிடுவதற்கான குறிகாட்டிகளை உருவாக்குவதுடன் அதனை அடைவதற்கு நடவடிக்கை எடுத்தல். | அளவிடுவதற்கான குறிகாட்டிகளை எவ்வாறு உருவாக்குவதென்பதை எதிர்காலத்தில் அறிந்துகொண்டு அவற்றை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்படும். |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ)அலுவலகக் கட்டிடம், பொதுநூல் நிலையம், பொதுச்சந்தை மற்றும் மீன்சந்தை என்பன அமைந்துள்ள காணியின் உரிமங்கள் அழிவடைந்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், அவற்றை மீளப்பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிமங்களை மீளப்பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் | எதிர்காலத்தில் அவற்றை மீளப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுப்போம். |
| (ஆ)அமைப்புகளிடமிருந்து பெறப்பட்ட 06 வாகனங்கள் மற்றும் 03 இழுவைப்பெட்டிகள் சபையினால் பயன்படுத்தப்பட்டு வருகின்ற போதிலும், அவற்றை சபையின் பெயருக்கு மாற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சபையினால் பயன்படுத்தப்படுகின்ற வாகனங்களை சபையின் பெயருக்கு மாற்ற நடவடிக்கை எடுத்தல். | எதிர்வரும் காலங்களில் இவை நிவர்த்திசெய்யப்பட்டு தங்களுக்கு அறிக்கை இடப்படும். |
| (இ) 2017ஆம் ஆண்டுக்கான பிரதேச சபைகளை வலுவூட்டும் தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் விநாயகபுரம் பேருந்து நிறுத்துமிட நிர்மாண வேலையானது வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் அனுமதியினை பெறாமல் ரூபா 167,000 மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு ரூபா 76,165 செலவு செய்யப்பட்ட பின்னர் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் எல்லைக்குள் நிர்மாணிக்கப்பட்டமையினால் இக்குறித்த வேலையானது இதுவரை பூரணப்படுத்தப்படாமல் மக்களின் பயன்பாட்டிற்கு உகந்ததல்லாமல் காணப்படுகின்றது. | இக்குறித்த வேலையினை பூரணப்படுத்தி மக்களின் பயன்பாட்டிற்கு விட நடவடிக்கை எடுத்தல். | தற்போது அப்பிரச்சினை தீர்ந்துள்ளதால் வெகு விரைவாக அவ்வேலைகளை நிறைவுசெய்யப்படும். |
| (ஈ) 1958ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதி மற்றும் 1980ஆம் ஆண்டின் 46ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை நிதி சட்டத்தின் பிரகாரம் நிதியத்திற்கான பங்களிப்பானது மாதாந்த மொத்த வேதனத்தின் மீது கணிப்பீடு செய்யப்படல் வேண்டும். ஆனாலும், மீளாய்வாண்டுக்கான இப்பங்களிப்பானது அடிப்படை வேதனத்திற்கு மாத்திரம் கணிப்பீடு செய்யப்பட்டு நிதியத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. | இப் பங்களிப்பானது மாதாந்த மொத்த வேதனத்தின் மீது கணிப்பீடு செய்யப்படல் வேண்டும். | இனிவரும் காலங்களில் இதனை மாற்றி மொத்தச் சம்பளத்தில் கணிப்பீடுசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை தங்களின் மேலான கவனத்திற்கு தருகின்றேன். |

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின் 02 உத்தியோகத்தர்களின் ரூபா 148,738 பெறுமதியான ஊழியர் கடனானது நிலுவையாக உள்ளதுடன், அதனை அறவீடு செய்வதற்கு நடவடிக்கையும் எடுக்கபட்பட்டிருக்கவில்லை. | கடன் நிலுவைகளை உரிய நபர்களிடமிருந்து அல்லது அவர்களின் பிணையாளர்களிடமிருந்து அறவிடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | இவர்கள் இருவரும் இறந்துவிட்டனர். இதுவரை இவர்களின் கடன்களை அறவிட நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்பதுடன் அவர்களது மரணப்பணிக்கொடையில் இருந்து அறவிட நடவடிக்கை எடுக்கப்படும். |

**3.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 126 ஆம் பிரிவுக்கமைய சபையினால் வருமானங்களை அறவிடுவதற்காக உபவிதிகளைச் சட்டமாக்கத் தவறியதன் காரணமாக சபையின் அதிகாரத்திற்குட்பட்ட இடங்களில் தனியார் நிறுவனங்களினால் தங்களின் விற்பனைப் பொருட்களை விளம்பரப்படுத்துவதற்காக மேலதிகமாக நிறுவிய 35 விளம்பரப் பலகைகளுக்காக அனுமதிப் பத்திரக் கட்டணத்தை அறவிட முடியாததனால் சபை வருடாந்தம் ரூபா 120,000 தொகையான வருமானத்தை இழந்துள்ளது. | விளம்பரம் தொடர்பான துணைவிதிகளை விதிப்பதன் மூலம் விளம்பரக் கட்டணங்களை அறவிட்டு சபையினது வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | கடந்த பலவருடங்களாக திருக்கோவில் பிரதேச சபையினால் உபவிதிகள் எவையும் உருவாக்கப்படவில்லை. இருந்தபோதிலும் அண்மையில் உபவிதிகளை உருவாக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.உபவிதிகளை உருவாக்குவது தொடர்பாக 2019 மே மாத சபை அமர்வில் கலந்தாலோசிக்கப்பட்டுள்ளது. பொருத்தமான உபவிதகளை உருவாக்குவதென்றும், ஆக்கப்பட்ட உபவிதிகளில் திருத்தங்களைச் செய்து வர்த்தமானியில் வெளியிடுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் இணங்கப்பட்டுள்ளது. |

**3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.5.1 சொத்துக்களை பதிவேட்டிற்கு உட்படுத்தாமை**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதிவரை சபைக்கு சொந்தமான காணிகள் மற்றும் கட்டிடங்களின் மொத்தப் பெறுமதி ரூபா 205,070,770 தொகையாக கணக்குகளில் காட்டப்பட்ட போதிலும், அசையும் மற்றும் அசையா சொத்துக்களை | நிலையான சொத்துப் பதிவேடுகள் முறையாக இற்றைப்படுத்தி கணக்குகளில் | இருப்புப்பொருட் பதிவேட்டில் நிலையான சொத்துக்கள் பதியப்பட்டுள்ளதனால் தனியானதொரு ஏடு பேணப்படவில்லை. மற்றும் 2018 இறுதிக்கணக்கறிக்கையில் நிலையான சொத்துக்கள் வேறாக |

| | | |
|---|---|---|
| நிலையான சொத்துப் பதிவேடுகளில் பதிவதற்கு சபையால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வெளிப்படுத்தப்பட வேண்டும். | காட்டப்பட்டுள்ளது. தற்போது அவற்றை தனியாக பதிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

**3.5.2 பராமரிப்பு மற்றும் திருத்தங்களினை மேற்கொள்ளத் தவறியமை**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| திருத்தியமைத்து பயன்படுத்தக் கூடிய நிலையில் காணப்பட்ட சபைக்கு சொந்தமான 03 உழவு இயந்திரம், 03 கல் அமுக்கி இயந்திரம் மற்றும் பவுசர் என்பவற்றை திருத்தி பயன்படுத்துவதற்கு 05 ஆண்டுகளுக்கு மேலாக நடவடிக்கை எடுத்திருக்காமையால் அவை பயன்படுத்தமுடியாத நிலைக்கு மாறியுள்ளது. | வாகனங்களை வருடாநத் மெய்மையாய்வுச் சபையின் பரிந்துரைக்கமைவாக அகற்றுவதற்கான அல்லது திருத்தி மீளப் பயன்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் அதற்கான நிதி கிடைக்கப்பெறும் பட்சத்தில் வாகனம் அனைத்தும் திருத்தியமைக்கப்படும் என்பதனை தங்களின் மேலான கவனத்திற்கு தருகின்றேன். |

**3.5.3 விளைவற்ற/ குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் ரூபா 5 மில்லியன் செலவில் நிர்மாணிக்கப்பட்டு 2017 ஆம் ஆண்டில் சபையினால் கையேற்கப்பட்டிருந்த விநாயகபுரம் பொதுச் சந்தைக்கட்டிடமானது பொதுமக்கள் நடமாட்டம் குறைந்த பகுதியில் கட்டப்பட்டமையினால் 2019 மே 24 ஆந் திகதி வரை 04 கடையறைகளில் 02 கடையறைகள் குறித்த நோக்கத்திற்கு பயன்படுத்தப்படாமல் விளைவற்றுக் காணப்படுகின்றது. | நிலையான சொத்துக்களை விளைவுள்ளதாக பயன்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும். | சந்தைக்கட்டடம் அமைக்கப்பட்ட பின்னர் வியாபார நடவடிக்கைகளை ஆரம்பித்தபோது ஏற்கனவே பழக்கப்பட்ட மக்களின் கொள்வனவு நடவடிக்கைளைப் பொறுத்தவரை அவர்கள் ஏற்கனவே கொள்வனவு செய்த தம்பிலுவில் மத்திய சந்தையில் இருந்து விநாயகபுரம் சந்தைக்கு விநாயகபுர மக்கள் மாறுவதாக இல்லை. இதனால் வியாபாரிகள் பொருட்களை விற்பனை செய்யமுடியாததால் கடையறைகளை பெற்றுக்கொள்வதில் தயக்கம் காட்டுகின்றனர். |
| (ஆ) தம்பிலுவில் மத்திய சந்தையின் மாடிக் கடையறையின் 12 கடையறைகளில் 05 கடையறைகள் நான்கு ஆண்டுகளிற்கு மேலாக பாவனையற்றுக் காணப்படுகின்றது. | சபையின் சொத்துக்களை விளைவுள்ளதாக பயன்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும். | நாம் பலமுறை அவைதொடர்பாக விளம்பரப்படுத்தியும் வியாபாரிகள் அக்கடைகளைப் பெற்று வியாபாரம் நடாத்த முன்வராமையால் தொடர்ந்தும் இந்நிலை காணப்படுகின்றது. |
| (இ) 2017ஆம் ஆண்டில் ரூபா 101,532 செலவில் சேதனப்பசளை அரைக்கும் இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்டு 2019 ஜனவரி மாதத்திலிருந்து இயந்திரக் | சபையின் சொத்துக்களை விளைவுள்ளதாக பயன்படுத்த நடவடிக்கை | இவ்வியந்திரத்தின் திருத்தவேலைகைளை மிகவிரைவில் மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| கோளாறு காரணமாக குறித்த நோக்கத்திற்கு பயன்படுத்தப்படாமல் விளைவற்று காணப்படுகின்றது. | எடுக்கவேண்டும். | |

**3.5.4 வருடாந்த பொருள் / இருப்பு மெய்மையாய்வு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் 2017 ஆம் ஆண்டிற்குரிய வருடாந்த மெய்மையாய்வுக் குழுவினால் விற்பதற்க்கு மற்றும் அழிப்பதற்கு பரிந்துரை செய்யப்பட்ட முறையே 62 மற்றும் 178 புத்தகங்களும் பொருட்களும் 2019 மே 24 ஆம் திகதி வரை அவை தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மெய்மையாய்வுக் குழுவினால் பரிந்துரை செய்யப்பட்ட நடவடிக்கைகள் உரிய காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டும். | 2017 ஆம் ஆண்டில் படிவம் 47ல் குறிப்பிடப்பட்ட பொருட்கள் தற்போதும் உள்ளடக்கப்பட்டள்ளது. இதற்கான அனுமதி கிடைக்கப்பெற்றதும் இவ்வாண்டு திருத்துதல், விற்றல், அழித்தல் நடவடிக்கைகள் இடம்பெறும். |

**3.6 பெறுகை**

**3.6.1 பெறுகைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பெறுகைகள் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | பெறுகைத் திட்டம் தயாரிப்பதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கவேண்டும். | எதிர்வரும் காலங்களில் அவற்றை தயாரித்து காட்சிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை தங்களின் மேலான கவனத்திற்கு தருகின்றேன். |

**3.6.2 ஒப்பந்த நிர்வாகம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி கொடை நிதித்திட்டத்தின் கீழ் ரூபா 500,000 செலவில் மண்டாணையில் உள்ள சேதனப் பசளை தயாரிக்கும் நிலையத்தை சுற்றி அமைக்கப்பட்ட யானை வேலியின் விரிவாக்கல் வேலைத்திட்டமானது, 2018 ஒக்டோபர் 18 ஆந் திகதி பூர்த்தியாக்கப்பட்டு கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்ட்டுள்ளது. எனினும் கடந்த 05 மாத காலமாக யானை வேலியின் மின் இணைப்பு செயலிழப்பு காரணமாக பயன்பாடு இன்றியும் பாதுகாப்பின்றியும் காணப்படுகின்றது. | இதனை சீர் செய்யது பாதுகாப்பினை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுத்தல். | யானைவேலி திருத்த வேலைகளுக்கான செலவு முன்திட்டம் தயாரித்த காலத்தில் யானைவேலிக்கான மின்சாரத்தை வழங்கும் மின்கலம் (Battery) பழுதடைந்து இருக்கவில்லை. தற்போது இது பழுதடைந்துள்ளதனால் அதனை உடனடியாக சீர் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |